# இயேசுவின் வாழ்க்கை, மரணம் உயிர்த்தெழுதலை பற்றிய ஆய்வுகள் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்**: இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், இயேசு யார்? சமீப நாட்கள் வரை, விமர்சகர்களின் விவாதப்படி நசரேயனாகிய இயேசு தம்மை இஸ்ரவேலின் மேசியாவாக கூறவில்லை என்பதாகும், தன்னை தனித்துவம் கொண்ட தேவகுமாரனாக கருதவில்லை என்பதாகும். ஆனால் இன்றைக்கும் அந்த மாதிரி சொல்கிறவர்கள் யாருமில்லை. ஏன் அப்படி? அதாவது, இயேசுவின் வாழ்வை பற்றிய வரலாற்று நிருபணங்கள் நேர்த்தியானவைகள் என்று நமக்கு எப்படி தெரியும்? இயேசுவின் சீடர்கள் இயேசுவை பற்றி எந்த கட்டுகதைகளையும் சொல்லவில்லை என்று நமக்கு எப்படி தெரியும்? இன்றைக்கு எனது விருந்தினர் இவற்றிற்கு பதிலளிக்க இருக்கிறார் அவர்தான் சித்தாந்த மேதையான Dr. வில்லியம் லேன் கிரேக், இவர் சித்தாந்தத்தில் Ph. D. பட்டத்தை இங்கிலார்ந்தின் பிர்மிங்கம் பல்கலைகழகத்தில் பெற்றவர், மேலும் முனிச் பல்கலைகழக இறையியல் டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிறார். ஜான் அன்கேர்பேர்க் நிகழ்ச்சியின் சிறப்பு தொகுப்பில் பங்குபெற உங்களையும் அழைக்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்**: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம், நாந்தான் ஜான் அன்கேர்பேர்க். இன்றைய நிகழ்ச்சியில் சந்திப்பதில் மகிழ்ச்சி. எனது விருந்தினர் Dr. வில்லியம் லேன் கிரேக் நமது நாட்களின் சித்தாந்த மேதைகளில் முன்னைனியில் இருப்பவர். அவர் உலகின் பிரசித்திபெற்ற பல்கலைகழகங்களை சேர்ந்த முன்னணி நாத்திகர்களோடு விவாதங்களிலும் உரையாடல்களிலும் பங்குபெற்று வருகிறார். சரி, Dr. கிரேக், இன்றைக்கு நீங்கள் எங்களோடு இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நாம பார்க்க இருக்கிற கேள்வி மிகவும் முக்கியமான கேள்வியாக இருக்கிறது: இயேசு யார்? நான்கு சுவிசேஷங்களில் அவர் பேசியதாக காணப்படுகிற பகுதிகள் அவர் சொன்னதுதான் என்பதை நான் எப்படி அறிந்துகொள்ள முடியும். சமீபத்தில் நீங்கள் பேசும்போது, விமர்சகர்கள் வல்லுநர்கள் விவாதத்தின் போது நசரேயனாகிய இயேசு தாம் தேவனுடைய குமாரன் என்றோ தன்னை தேவன் என்றோ அல்லது தெய்வீகமாணவர் என்றோ சொல்லவில்லை என்றனர். ஆனால் இன்றைக்கு, நீங்க அப்படி, எந்தவொரு நாத்திக கருத்துக்களும் உண்மையல்ல என்கிறீர்கள். ஏன் என்று சொல்லுங்க.

**டாக்டர்** வில்லியம் லேன் கிரேக்:...காரணம் என்னன்னா, ஜான், புதிய ஏற்ப்பட்டு வரலாற்றாளர்கள் எல்லாரும் சரித்திர நாயகனாகிய

நசரேயனாகிய இயேசுவின் போதனைகள் மற்றும் வாழ்க்கையை பற்றி அறிந்திட சுவிசேஷங்கள் போதுமான தகவல்களை அளிப்பதாக கூறுகின்றனர். சிலசமயங்களில் இதைதான் இயேசுவை குறித்த யூதர்களின் மறு அறிக்கை என்று சொல்லப்படுகிறது. பண்டிதர்களும் நசரேயனாகிய இயேசுவின் பின்னணியை பற்றி அறிந்துகொள்ளவதற்கு கிரேக்க ரோம கட்டுகதைகள் சரியானதல்ல என புரிந்துகொண்டதோடு, முதல் நூற்றாண்டின் பாலஸ்தீன யூதமுறைகளை நம்பினார்கள். இயேசுவும் ஒரு யூதர், அவருடைய சீஷர்கள் எல்லாரும் யூதர்கள், அதனால் நசரேயனாகிய இயேசுவின் பின்னணியை பற்றி அறிந்துகொள்வதற்கு இது எதிர்மாறானதாக இருந்திடும். அப்படி செய்யும்போது, சுவிசேஷங்கள் துல்லியமானதாக தோன்றிடும், பொதுவாக இந்த நபருடைய வாழ்க்கை மற்றும் போதனைகளுக்கு ஏற்றதாக இருந்திடும்.

நசரேயனாகிய இயேசுவை பற்றி பண்டைய கால பதிவுகளில் அதிகப்படியான குறிப்புகளில் சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்களின் ஆவணங்கள், கிறிஸ்தவ ஆவணங்கள், ரோமர்களின் ஆவணங்கள். இந்த தொகுப்புகளின் முதன்மையானவைகளை தொகுத்து புதிய ஏற்பாடாக கொடுக்கப்பட்டிருகிறது. நம்முடைய நேயர்கள் இதை புரிந்துகொள்ள வேண்டியது அவசியம் ஆதி நாட்களில் புதிய ஏற்ப்பாடு என்று எதுவும் இல்லை. வெறும் ஆவணங்கள் மட்டும் கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டு இருந்தது, அதைதான் முதல் நூற்றாண்டில்

பகிர்ந்துகொண்டனர், லூக்கா சுவிசேஷம் மற்றும், அப்போஸ்தலர்களின் நடபடிகள், பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய முதல் நிருபம், கீரீசில் இருந்தது. சுமார் நூறு வருடங்களுக்கு பிறகுதான் சபையானது இந்த ஆவணங்களை தொகுத்து அதற்கு வடிவம் கொடுத்து புதிய ஏற்பாடாக அளித்தனர்.

எனவே, இந்த காரியத்தின் அடிப்படையில் தான், இயேசுவின் வாழ்வை குறிக்கும் ஆதிகால ஆவணங்கள் அனைத்தும் புதிய ஏற்ப்பாடு என்ற கூரையின் கீழ் வந்தடைந்தது. சபையானது இரண்டாம் தரமானவைகளை விளக்கினது, உருவாக்கப்பட்ட காரியங்கள், அதனை விடுபட்ட சுவிசேஷங்கள் என்கிறோம், அவை அனைத்தும் இயேசுவின் காலத்திற்கு பிறகு நூறு ஆண்டுகளுக்கு பின்பு எழுதப்பட்டது, எல்லாருக்குமே அவை உருவாக்கப்பட்டவை எனபது தெரியும். இது மிகவும் முக்கியமானது, ஏன்னா பிற்காலத்தில் இயேசுவின் வாழ்வை பற்றின ஆராய்சிகள் அனைத்தும் இந்த விடுபட்ட வேதாகம ஆவணங்களை கொண்டு நடத்தப்பட்டது, அதாவது, இதிலிருந்து எடுக்கப்பட்டது, இரண்டாம் தரம், முதன்மையானவைகளை போல இதன் தன்மை காணப்படவில்லை.

ஆகவே இது மிகவும் முக்கியமானவை இயேசுவை பற்றிய ஆதிகால ஆவணங்களை பார்க்கும்போது, குறிப்பிட்ட வட்டத்திற்குள் இவற்றை பார்த்ததுகிடையாது. வேதாகமத்தை வைத்தே வேதாகமத்தை நிரூபிக்க வல்லுநர்கள் முயலுவது கிடையாது. மாறாக, அவர்கள் முதலாம்

நூற்றாண்டில் உண்டான இந்த ஆவணங்களை ஆதாரமாக வைத்து கொண்டு நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய காரியங்களை எடுத்து கூறுகிறார்கள். அதனால அவங்க கேட்க்கிற கேள்வி இதுதான்: இந்த ஆவணங்களை எப்படி நம்பிடலாம்?

**ஆன்கர்பெர்க்**: சரி, அதை பற்றி நாம் பேச வேண்டியது அவசியம், ஏன்னா இப்ப நாம உண்மையின் சாரத்தை பெற்றுகொண்டிருக்கிறோம். அதை நேயர்களுக்கும் விளக்கி சொல்லுங்கள் ஏன் இது எல்லாரும் புரிந்துகொள்வது கடினமானதாக தோன்றுகிறது.

கிரேக்:..உண்மையின் சாராம்சத்தை எடுத்துகொள்வது கடினம்தான் ஏன்னா இந்த ஆவணங்களை பார்க்கும்போது, உண்டாகிற கேள்வி: இதை ஏற்றுகொள்ள முடியாது என்று ஏதாவது ஒரு விதத்தில் நிரூபிக்கபடாதவரைக்கும் இதை ஏற்றுகொள்வது சுலபமாக இருந்திடுமா? அல்லது இதெல்லாம் நம்பத்தகுந்தவை என்று எண்ணக்கூடிய நிலையில் நிருபிக்கபடாதவரை இதை ஏற்றுகொள்ள முடியாது என்றிடலாமா? இவை சரியானது என்று நிருபிக்கபடுமா அல்லது தவறு என்று நிரூபிக்கப்பட்டு நானமடைந்திடுமா?சரி, இது நமக்கு வியப்பாக தோன்றிடலாம், நாத்திகர்களின் விமர்சனத்தினபடி இந்த சுவிசேஷங்கள் சரியானவை என்று நிரூபிக்கப்படும்வரை இதை ஏற்றுகொள்ள முடியாதது போல தோன்றிடும். அதாவது, அவர்கள் ஏதாவது ஒரு கட்டத்தில் இவை அனைத்தும் உண்மை என்று

நிரூபணம் ஆகாதவரை இதை ஏற்றுகொள்ள முடியாது என்ற முடிவிற்கு வருகிறார்கள். இது என்னை பொறுத்தவரை வரலாற்றை பற்றி கருதிடும் முறைக்கு மாறாக இருக்கிறது; சுவிசேஷங்கள் ஏற்றுகொள்ளப்படுபவை அல்ல என்ற நிலையை ஆரம்பத்தில் இருந்தே சொல்லிக்கொண்டிருக்கிரார்கள்

**ஆன்கர்பெர்க்**: சுவிசேஷங்களை சார்ந்துகொள்ளலாம் என்பதரான சிலர் காரணங்கள் என்ன?

கிரேக்:..சுவிசேஷங்கள் சார்ந்துக்கொள்ள ஏற்றவைகள் என்பதை எடுத்து சொல்லுவதற்கு பல காரணங்கள் இருக்கிறது என்று நினைக்கிறேன். அதில் இரண்டை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாக சுவிசேஷங்கள் எழுதப்பட்ட காலம் மற்றும் ஆதிகால சரித்திரத்தில் பதிசெய்யபட்டிருக்கும் இந்த நிகழ்வுகள் நடந்தத காலத்திற்கும் இடையில் உள்ள இடைவெளி. இவை இரண்டையும் ஒப்பிட்டு பார்க்கும்போது, அதாவது ஆதிகால ஆவணங்கள் பெரும்பாலும் உதாரணமாக மாவீரன் அலெஸ்சாண்டர் வாழ்க்கை சரித்திரம் ஆரியன் மற்றும் பல்டார்க் மூலம் அவர் இறந்து நானூறு ஆண்டுகளுக்கு பிறகு தான் பதிவு செய்யப்பட்டது. இருந்தாலும் வரலாற்றாளர்கள் அந்த சம்பவங்கள் நிஜம் என்பதை ஏற்றுகொள்ள முன்வருகிறார்கள்.

**ஆன்கர்பெர்க்**: அதில் அவர்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லையே.

கிரேக்:...அது சரிதான், அதற்கு மாறாக, சுவிசேஷங்களும் புதிய ஏற்ப்பாட்டின் பவுலின் நிருபங்கள் அனைத்தும் முதல் நூற்றாண்டில் அந்த நிகழ்வுகளுக்கு பிறகு எழுதப்பட்டது, அதை கண்ணாரக்கண்ட சாட்சிகளும் உயிரோடுதான் இருந்தார்கள். அதுமட்டுமல்ல, நிகழ்கால புதிய ஏற்பாட்டு பண்டிதர்களின் கண்டுபிடிப்பு சுவாரஸ்யமான முன்னேற்றத்தை காண்பிக்கிறது அவர்கள் புதிய ஏற்பாடு சார்ந்துக்கொள்ள கூடியதுதான் என்று சொல்லும்  புதிய ஏற்பாட்டிற்கு பின்னால் இருக்கும் உண்மையான செயல்பாட்டு முறைகளை கண்டறிந்திருக்கிறார்கள்.

சிலர் சில கேள்ல்விகளை எழுப்பலாம், “சரி, புதிய ஏற்பாட்டை தவிர இயேசுவை பற்றிய தகவல்களை கொண்டிருக்கும் மற்ற ஆவணங்கள் இருக்கிறதா?” ஆமா, இருக்கிறது; ஆனால் இந்த ஆவணங்களின் சிறப்பம்சம் என்னவென்றால் எதுவே காலம்கடந்து எழுதப்படவில்லை, எல்லாமே ஆதிக்கால ஆவணங்களாக இருக்கிறது, ஆகவே புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் அதை ஏற்றுகொண்டவர்களாக இருந்தார்கள். அதில் இயேசுவின் இறுதி பயணமும் அடங்கும், இயேசு எருசலேமில் கடைசி வாரத்தில் உபத்திரவத்தை மரணத்தையும் எதிர்கொண்ட சம்பவங்கள், அதை மாற்கு தமது சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார். இது மறுக்க முடியாத ஆவணமாக கருதப்படுகிறது, இது இயேசுவின் வாழ்க்கைக்கு பிறகு பாத்து வருட இடைவெளியில் எழுதப்பட்டதாகும், கண்ணாரக்கண்ட சாட்சி.

அதேபோல, கிரீசில் பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய தனது முதல் நிருபத்தில், அவருக்கும் மனம்மாறிய மக்களுக்கும் அளிக்கப்பட ஆதிகால காலாச்சார பின்னணியை பற்றி அதில் குறிப்பிடுவதை பார்க்க முடியும். இந்த பாரம்பரியங்கள் அனைத்தும் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் உயிர்த்தெழுந்த பிறகு அவர் பலருக்கு தரிசனமானதையும் எடுத்துரைக்கிறது. வேத பண்டிதர்கள் இந்த பழங்கால பாரம்பரியமானது இயேசு சிலுவையில் அறையப்பட்ட முதல் ஐந்து ஆண்டுகளில் எழுதப்பட்டது என்று கூறுகின்றனர். ஆகவே மற்ற ஆதிக்கால வரலாற்று ஆவணங்களோடு ஒப்பிடும்போது சுவிசேஷங்கள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் போதனைகளை குறித்து சொல்லப்படுகிற அனைத்தும் ஏற்றுகொள்ளப்படுபவை என்றும் அது குறுகிய காலத்தில் சொல்லப்பட்ட கட்டுகதைகள் அல்ல என்பதையும் தெளிவாக எடுத்துரைப்பதை பார்க்க முடியும்.

A.N. ஷெர்வின் -வைட் கிரேக்க - ரோம வரலாற்றாளர், அந்த நூற்றாண்சுகளின் காலத்தில் இருந்த  வரலாற்றாளர் இயேசுவை பற்றி கூறியிருக்கிறார். மேலும் ஷெர்வின் வைட் கூறுகிறார் அதாவது ஒரு சம்பவம் எப்போது நடந்து என்று அறிந்துகொள்ள கிரேக்க வரலாற்று எழுத்துக்களை ஆய்வு செய்வீர்களானால், அந்த சோதனையில் உங்களால் ஒரு விஷயத்தை புரிந்துகொள்ள முடியும் அதாவது வரலாற்று அம்சங்களை மாற்றியமைக்க இரண்டு தலைமுறைகளுக்கு

இடையே இருக்கும் இடைவெளி என்பது மிக குறைவான கால நேரம் என்கிறார். எனவே, சுவிசேஷங்களில் நீங்கள் பார்க்கும்போது, வரலாற்றில் இருந்து இந்த சம்பவங்களை முற்றிலுமாக அகற்றுவதற்கான கால அவகாசம் மிக குறைவாக இருக்கிறது என்று கூறுகிறார்.

**ஆன்கர்பெர்க்**: சுவிசேஷங்களை நாம நம்பலாம் என்பதற்கு நீங்க சொல்ற இன்னொரு காரணம் லூக்காவையும் அப்போஸ்தல நடபடிகளையும் எழுதிய லூக்காவில் இருக்கிற மிகப்பெரிய உதாரணம்.

கிரேக்:..ஆமா. லூக்கா புதிய ஏற்ப்பட்டு ஆசிரியர் ஒரு வரலாற்றாளராக தன்னை கருதிக்கொண்டு எழுதியிருக்கிறார். அப்போஸ்தலர் நடபடிகள் ஆதிகால கிறிஸ்தவர்களின் வரலாற்றை கூறுகிறது எருசலேமில் இருந்து எப்படி மெடிட்டரேனியன் பகுதிகள் முழுவதும் பரவினது என்று கூறுகிறது. அப்போஸ்தலர் நடபடிகளில் லூக்கா துல்லியமாக குறிப்பிட்டிருக்கும் காரியங்களை திரும்ப திரும்ப பார்க்கக முடியும். சமீபகாலத்தில் காலின் ஹேமர், அவர் ஒரு கிலாசிஸ்ட் வரலாற்றாளர் புதிய ஏற்பாட்டு காரியங்களை ஆராயும்படி முன்வந்தார், அதை பற்றி தனது புத்தகத்தில் அருமையாக சொல்லியிருக்கிறார், ஆதிகால கிரேக்க வரலாற்றின்படி அப்போஸ்தலர் நடபடிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. கேமர் துல்லியமாக அப்போஸ்தலர் நடபடிகளை வாசிக்கிறார், வரலாற்று ஆதாரங்களை அதிலிருந்து

எதுத்து, பொதுவான ரீதியில் ஆதிகாலத்தில் நடந்த உண்மையான சம்பவங்களின் சாராம்சம் மாறாமல் அப்படியே இருக்க வேண்டும் என்ற சொன்னால் நிச்சயம் அந்த நிகழ்வுகளின் போது அங்கு இருந்தவர்களால் மட்டும்தான் சாராம்சம் மாறாமல் சொல்ல முடியும் என்று உண்மையை அவர் முன்வைக்கிறார். மறுபடியும் மறுபடியும் மறுபடியுமாக லூக்காவின் அறிக்கைகள் துல்லியமானதாக இருப்பதை பார்க்கிறோம். அதாவது அலெக்ஸ்சாண்டரிய கப்பல்கள் மூலம் எகிப்திற்கும், பின்பு அங்கிருந்து பவுல் மெடிட்டரேனியன் பகுதிகளுக்கு சென்றதும், அந்த தீவுகளில் இருந்த அலுவலர்களை அவர் சந்தித்தது போன்ற அனைத்து விஷயங்களையும், லூக்கா சரியாக பதிவுசெய்திருக்கிறார். மறுபடியும் மறுபடியும் லூக்காவின் வரலாற்று பதிவுகள் சரியானது என்பதை அப்போஸ்தலர் நடபடிகள் எடுத்து கூறுகிறது.

**ஆன்கர்பெர்க்**: உண்மையில், பில், ஜனங்களுக்காக இதை வாசிக்கிறேன். லூக்கா சுவிசேஷத்திற்கு லூக்கா இதை முகவுரையாக கூறியிருக்கிறார். அவர் சொல்லுகிறார்: “மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளில் ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளை குறித்து சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட

விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய் தோன்றிற்று.”

கிரேக்:..ஆமா. இங்க லூக்கா இந்த உண்மையை பற்றி சரியாக ஆராய்ந்து கூறுகிறதை முன்வைக்கிறார், இந்த தகவல்களை பார்த்த சாட்சிகளை அவர் பேட்டி காண்பது போல் இருக்க்ரியது. இதில் சுவாரசயமான விஷயம் என்னவென்றால் லூக்கா மற்றும் அப்போஸ்தலருக்கான முகவுரை கிரேக்க வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது, அதாவது துசிடிடீஸ் மற்றும் ஹெரோடோடஸ் போல. லூக்கா சொல்கிறது என்னவென்றால், “நான் விரும்பினால் மற்ற வரலாற்றாளர்கள் போல ஸ்டைலாக எழுத முடியும்.” ஆனா அவர் இங்கு கிரேக்கத்தின்பொதுவான வழக்கத்தின்படி எழுதியிருக்கிறார், வழக்கு மொழியில் இருப்பதுபோல, தமது எழுத்துக்களை பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் அவர் நினைத்திருந்தால் கிரேக்க வரலாற்றாளர்கள் விரும்புகிற ரீதியின்படியாக தனது வாசகர்களின் கவனத்தை ஈர்க்கும்படியாக எழுதியிருக்க முடியும்.

அதுமட்டுமல்ல மேலும் அப்போஸ்தலர் நடபடிகளின் பதினாறாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, இதை ஆக்கியோன் இங்கு பன்மையில் பேசுவதை பார்க்க முடிகிறது: :துரோவாவில் கப்பல் ஏறி, சாமோத்திராக்கே தீவுக்கும் நேராய் ஓடி... நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்திற்கு போகையில்,: என்கிறார். அதாவது லூக்காவும் பவுலுடன்

அவரது மெடிட்டரேனியன் பட்டணங்களின் பிரயாணங்களில் கூட இருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. மேலும் சாட்சிகளை கண்டு அவர்களோடு பேசும்படியாக பவுலோடு சேர்ந்து அவரும் எருசலேமிற்கு சென்றதாக, அவர் கூறியிருக்கிறார்.

வரலாற்றாளர் A. N. ஷெர்வின் வைட் அவர்களின் கருத்துப்படி, அப்போஸ்தல நடபடிகள் வரலாற்று உண்மைகளின் தொகுப்பு உண்மை அதிகமாக இருக்கிறது. எந்த அடிப்படை வரலாற்று பதிவுகளை இவற்றை  நிராகரிப்பதுபோல காணப்பட்டால், அது எதுவாக இருந்தாளும் சரி, அவை முட்டாள்தனமானவை. இதே ஆக்கியோன் தான் இயேசுவின் வாழ்க்கையை பற்றி லூக்கா சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார், அவருடைய இரண்டு வேலைகளில் முதலாவது அதுதான், லூக்கா - அப்போஸ்தல நடபடிகள். அப்போஸ்தல நடபடிகளில் அவர் வெளிப்படுத்தியிருக்கும் வரலாற்று ஆதாரங்கள் அனைத்தும் இயேசுவின் வாழ்க்கையை பற்றி அவர் சொல்கிற அனைத்தும் நம்பகமானவைகளாக இருக்கிறது என்பதை நமக்கு எடுத்து கூறுவதாக இருக்கிறது.

சரி, இந்த முதல் கருத்தை இதோடு முடித்துகொள்ளலாம், சுவிசேஷங்களை ஏற்றுகொள்ள முடியாது என்ற கண்ணோட்டத்தோடு அவற்றை அணுகுவது அநீதியான செயலாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். அவை சார்ந்துக்கொள்ள கூடியவை என்று நாம் ஏற்றுகொள்ளாவிட்டாலும், சராசரியான ஒன்று என்ற

மனப்பான்மையோடு அதை அனுகிடவேண்டும் அதனுடைய ஆதாரங்கள் நடத்தி செல்லும் பாதையில் நடக்க ஆயத்தமாக இருக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, புதிய ஏற்பாட்டு வரலாற்றாளர்கள் பல உண்மைகளை முன்வைத்துக்கொண்டு இருக்கிறார்கள், இது தத்ரூபமான உண்மை என்ற நிலை, அதாவது அது இயேசுவின் வாழ்கையில் நடந்த நிகழ்வுகள் மற்றும் குறிப்பிட்ட கூற்றுகளுக்கும் பொருந்தும், அவை அனைத்தும் இது வரலாற்று சம்பவம்தான் என்பதை உறுதி செய்யும் விதத்தில் வரலாற்று சாத்தியங்களை முன்வைக்கிறது. இயேசுவின் வாழ்வில் உண்டான நிகழ்வுகள் மற்றும் கூற்றுகளோடு இந்த உண்மைகளை ஒன்று படுத்தி பார்க்கும்போது, நமக்கு இன்னும் அதிக வலுவான ஆதாரமாக இருப்பதை பார்க்க முடியும்.

**ஆன்கர்பெர்க்**: ஆமா, இந்த உபகரணங்களை தான் வரலாற்றாளர்கள் உபயோகிக்கிறார்கள், வெறும் புதிய ஏற்ப்பட்டு ஆவணங்கள் மட்ட்மல்லாது, மற்ற பிற புத்தகங்களும் உண்டு.

கிரேக்:..அதுவும் சரிதான். இது வரலாற்றில் ஒப்புகொள்ள கூடிய ஒன்று என்பதை நிருபிக்கும்படியான வரலாற்று ஆவணங்களோடு ஒப்பிட்டு பார்க்க ஏற்ப்புடைய உண்மைகளாக கருதப்படுகிறது.

**ஆன்கர்பெர்க்**: பில், எந்த வரலாற்று குறிப்பை வல்லுநர்கள் பயன்படுத்தி வரலாற்று கூற்றுகளையும் அல்லது ஆவணங்களில்

இருக்கும் எந்த காரியங்களை அவர்கள் கருத்தில் கொள்கிறார்கள் என்று ஜனங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என விரும்புகிறேன். அதை பற்றி பார்க்கலாமே.

கிரேக்:..இதில் அதிகப்படியானவை இருக்கிறது, ஜான். அதில் ஆறு காரியங்களை சொல்லுகிறேன்.

முதலாவதாக இவை வரலாற்றில் பொருந்தக்கூடியவை. அதாவது இவை, இந்த நிகழ்வுகள் அனைத்தும் காலம் இடம் ஆகியவற்றோடு பார்க்கும்போது உண்மையென தெரிகிறது. சுவிசேஷங்கள் அனைத்தும் ஏனோதானோ என்று இல்லை, அவரை அனைத்தும் முதலாம் நூற்றாண்டின் யூத சமுதாயத்தினரின் கலாச்சாரத்தோடு பொருந்தியிருக்கிறது.

இரண்டாவதாக ஆதிகால ஆவணங்கள் தனித்து நிலைபெற்றிருக்கிறது. ஆதிகால ஆவணங்களில் ஒரு நிகழ்வோ அல்லது கூற்றோ சொல்லப்பட்டிருந்தால் அவை அனைத்தும் தனித்து நிற்கும் ஆதாரங்களாக இருக்கிறது, அதனால் இது வரலாற்று நிகழ்வுதான் என்பதை அதிகமாக உறுதிபடுத்துகிறது. ஏன்னா ஆதிகால தனித்துவமான ஆவணங்கள் ஒரே விஷயத்தை கட்டுகதையாக கூறுகிறது என்று சொன்னால் அது  ஏற்ப்புடையதாக இருக்காது. இயேசுவின் அற்புதங்கள் சிறந்த நிகழ்வுகளின் உதாரணமாக

இருக்கிறது அது அதிகமாகவும் தனித்தனியே பல ஆவணங்களில் குறிப்பிடபட்டதாகவும் இருக்கிறது.

மூன்றாவது உண்மை என்னவென்றால் சாத்தியமற்றவை அல்ல என்ற உண்மை; ஒரு காரியம் வியர்த்தமாக தெரிந்தாலோ அல்லது ஆதிகால கிறிஸ்தவ அமைப்போடு இணைந்திராவிட்டாலோ, அது கிறிஸ்தவர்களால் உண்டாக்கப்பட்டதாக இருக்க வாய்ப்பில்லை. அதற்கு ஏற்ற உதாரணம் யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த சம்பவம். யோவான் ஜனங்கள் பாவ மன்னிப்பை பெரும்படியாக ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். ஆதி கிறிஸ்தவர்கள் இயேசு பாவமற்றவர் என்று நம்புகிறபடியால், இயேசு யோவானிடம் போய் ஞானஸ்நானம் பெற்றார் என்ற கதையை உருவாக்கிடவில்லை. ஆகவே இவை அனைத்து சரித்திர உண்மைகள் என்பதை இப்போது பண்டிதர்கள் மேதைகள் உணர்கிறார்கள், யோவான்தான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

நான்காவது உண்மை என்னவென்றால் மாற்றுகருத்து. ஒரு சம்பவம் ஆதிகால யூதர்களின் முறைபடி இல்லாவிட்டால், அல்லது ஆதிகால கிறிஸ்தவர்களின் முறைபடி இல்லாவிட்டால், அது வரலாறாக இருக்குமே தவிர ஆதிகால யூதர்கள் கிறிஸ்தவர்களின் வழக்கமாக இருக்காது. இதாரனமாக இயேசு தம்மை மனுஷ குமாரன் என்று சொல்வதை எடுத்து கொள்வோம். இந்த பெயரை ஆதிகால கிறிஸ்தவ திருச்சபையினர் இயேசுவுக்கு பயன்படுத்தவில்லை. மேலும் யூத

கலாசாரத்திலும் இந்த வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. இருந்தாலும் இயேசு சுவிசேஷங்களில் தம்மை பற்றி சொல்லும்போது, இயேசு தம்மை குறித்து எப்படி நினைக்கிறார் என்பதை வெளிபடுத்துவதாக இருந்தது, அவர் தம்மை மனுஷ குமாரன் என்று கூறுகிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. நான்கு சுவிசேஷங்களில் தம்மை குறித்து எண்பத்தி இரண்டு முறை சொல்ல பயன்படுத்தியிருக்கிறார். அது அதிகம் தானே!

கிரேக்:..ஆமா, அது சரிதான். ஐந்தாவது உண்மை என்னவென்று சொன்னால் சாராம்சம் மாறாத நிலை. அதாவது, சுவிசேஷங்களில் இருக்கும் எபிரேய மற்றும் ஆராமிய சுவடுகள். சுவிசேஷங்கள் கிரேக்க மொழியில் எழுதபப்ட்டது; அதனால் ஆராமிய எபிரேய சுவடுகளாய் அதில் பார்க்கும்போது, இயேசுவும் அவருடன் இருந்தவர்களும் பேசின மூல பாஷையின் சாராம்சத்தை அதில் காண முடியும்.

இறுதியாக ஆறாவது கொள்கை என்னவென்றால் ஒத்துபோகுதல். இந்த நிகழ்வுகள் ஏற்க்கனவே இயேசுவை பற்றி சொல்லப்பட்டிருக்கும் உண்மைகளோடு ஒத்திருந்தால், இந்த சம்பவங்கள் வரலாற்று ரீதியாக உண்மை என்பதை அதிகமாக வலியுறுத்துவதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி. இந்த காரியங்கள் அனைத்தும் புத்தகத்தில் இருக்கும் குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கு பொருந்துமா. நீங்க பார்க்கிற

விஷயங்களில் துளைகளை அவர்கள் தேடுகிறார்கள். அதை விளக்கிடுங்கள்.

கிரேக்:..அது சரிதான். இந்த வார்த்தைகள் மற்றும் இயேசுவின் வாழ்கையின் நிகழ்வுகள் எந்த இடத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் அவை உண்மை என்பதற்கான ஆதாரங்கள் இருக்கிறது. ஏற்றுகொள்ள முடியாத சில விடுபட்ட சுவிசெஷங்களிலும் மேலும் குரானிலும் வரலாற்று பதிவுகள் இயேசுவை பற்றி சொல்கிற காரியங்களை பார்க்க முடியும். இதுவும் முக்கியமானது தான் ஏன்னா அதற்கும் அர்த்தம் இருக்கிறது, உதாரணமாக, இதை நிருபிக்க வேண்டுமென்றால், அதாவது, இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற்றார், மேலும் இயேசு பெத்லகேமில் பிறந்தார் என்று சொல்லி சுவிசேஷங்கள் சொல்கிற காரியங்கள் எல்லாம் ஏற்றுகொள்ளப்படுபவை என்று நிரூபிக்க அவசியமில்லை, அல்லது இயேசு 5000 பேரை போஷித்ததை காண்பிக்க வேண்டியதில்லை. இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றும் இது வரலாற்று பூர்வமாக நம்பப்படவேண்டிய விஷயங்கள் என்பதை எடுத்துறைக்கு வரலாற்றில் இதன் மதிப்பை மேம்படுத்துவதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்**: ஆல்ரைட், பில், நமக்கு நம்பகமான தகவல்களை கொடுக்கும் ஆவணங்கள் நம்மிடம் இருக்கிறது என்று வைத்துகொள்வோம், நாம் பார்க்க போகிற ஒவ்வொரு கூற்றிற்கும்

அதை ஆராய்ந்து பார்க்க தேவையான உபகரணங்கள் நம்மிடம் இருக்கிறது. உச்சரிப்பில் வருகிற சில கூற்றுகளை சொல்லி அதை துவங்கிடலாம், அதாவது, இயேசுவே சொன்னவைகள். அவர் தம்மை இஸ்ரவேலின் மேசியா என்று சொல்லியிருக்கிறாரா?

கிரேக்:..நசரேயனாகிய இயேசு இஸ்ரவேலின் மேசியாவாக கூறப்பட்டார் என்று நான் நினைக்கிறேன், இது அவருடைய வார்த்தையிலும் செய்கையிலும் வெளிபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த மேசியா யார்? மேசியா என்பவர் தாவீது ராஜாவின் வம்சத்தில் எருசலேமில் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து இஸ்ரவேலின் சத்துருக்களை தகர்த்து போடுகிறவர், தேவ ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்கிறவராக கருதப்பட்டார். அவர் யூதருக்கும் புறஜாதிகளுக்கும் சரிசமமான நிலையை உண்டாக்கி தந்திடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இயேசு தான்தான் அந்த மேசியா என்பதாக போத்தித்து இருக்கிறார், அதாவது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாக காண்பித்தார்.

மேசியா என்பதற்கு கிரேக்கத்தில் கிறிஸ்டாஸ் அல்லது கிறிஸ்து எனப்படும். ஆதிகால கிறிஸ்தவர்கள் இயேசுவை தாங்கள் யாரென்று நம்புகிறார்கள் என்பதை வெளிப்படுத்த இந்த பதத்தைத்தான் பயன்படுத்தினார்கள். உதாரணமாக, மாற்கு சுவிசேஷம் இந்த வார்த்தைகளுடன் தான் துவங்குகிறது: “தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் ஆரம்பம்.” யோவான் சுவிசேஷத்தின் இறுதியில் சொல்லப்பட்டிருக்கும் காரியம், “நீங்கள் இயேசு கிறிஸ்து

தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கும்படியாக இவைகள் உங்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே ஆதிகால கிறிஸ்தவர்கள் இயேசுதான் மேசியா என்பதை விசுவாசித்தார்கள். அவரை அவர்கள் கிறிஸ்து என்றார்கள். உண்மையில், இந்த பெயர் இயேசுவின் இரண்டாம் பெயராகவும் அவருக்கு இதான் இது பொருந்துவதாகவும் இருந்தது. இயேசு கிறிஸ்து, அதற்கு அர்த்தம் மேசியா இயேசு.

சரி, கேள்வி இதுதான், நசரேயனாகிய இயேசு தம்மை மேசியா என்று ஒருபோதும் சொல்லவில்லை என்றால், பின்பு உலகத்தில் கிறிஸ்தவ அமைப்புகளுக்கு இந்த யோசனை எங்கிருந்து கிடைத்திருக்கும்? மேசியா இஸ்ரவேலர்களின் சத்துருக்களை தகர்த்து போடுகிரவராக இருக்க வேண்டும் - ஆதாவது இதன் படி ரோமில் - அவன் ஒரு குற்றவாளியை போல அவமானத்தோடு தண்டனைக்கு உட்படுத்த பட்டிருக்க முடியாது. நசரேயனாகிய இயேசுவின் சிலுவை மரணமானது அவர் தான் மேசியா என்று நம்புவதற்கு சாத்தியமற்ற நிலையை உண்டாக்குகிறது அவரும் தம்மை பற்றி அப்படி சொல்லியிருப்பதாக எங்காவது பார்க்க முடிகிறதா. அப்படின்னா ஆதிகால கிறிஸ்தவ சபைகள் இயேசுதான் மேசியா என்பதை நம்புவதற்கு இயேசு தமது வாயினால் தம்மை மேசியா என்று சொல்லியிருக்க வேண்டும், அதாவது அவர் மரணத்தில் இருந்து உயிர்த்தது இதை நிறைவு செய்திருப்பதாக நம்புகிறார்கள், அதாவது

சிலுவை மரணத்தின் சூழ்நிலையை அவர் முற்றிலுமாக மாற்றிவிட்டார். எனவே, ஆரம்பத்தில் இருந்தே மேசியாவை குறித்த கூற்றுகள் எல்லாம் இயேசுவுக்கு பொருந்துவதாக காணப்படுவதில் எந்த சந்தேகமும் இல்லை. இயேசுவின் வாழ்க்கை மற்றும் நிகழ்வுகளை குறித்து ஆராயிம்போது இந்த காரியம் இன்னும், தெளிவாக புலப்படுகிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி. என்னுடைய கருத்துப்படி எல்லா மேதைகளும் ஒப்புக்கொள்ளும் சிறந்த உதாரணமாக இருப்பது யோவான் இயேசுவிடம் கேட்ட கேள்வியை பற்றிய காரியம், இயேசு யோவானுக்கு பதில் சொல்லுகிறார், அதில் அவர் மேசியாவா இல்லையா என்று சொல்லி அனுப்புகிறார்.

கிரேக்:..ஆமா. சுவிசேஷங்களில் யோவான் ஸ்நானகன் சிறையில் அடைக்கப்பட்ட சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது அவர் நசரேயனாகிய இயேசுவிடம் செய்தி கேட்டு அனுப்புகிறார், "வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வர காத்திருக்க வேண்டுமா?" இதே காரியத்தை மத்தேயுவும் லூக்காவும் பதிவு செய்திருப்பதை பார்க்க முடியும். மேலும் இந்த சம்பவத்தின் சாராம்சம் முக்கியமான மறுக்க முடியாத உண்மைகளை கூறுகிறது, ஏன்னா யோவான் ஸ்நானனுக்கு இயேசுவின் மீதிருந்த விசுவாசம் தடுமாறுவதை காட்டுகிறது. இது உண்மை இல்லை என்றால் யோவானை பற்றி இப்படியொரு

கட்டுகதையை உண்டாக்க ஆதிகால திருச்சபைக்கு அவசியமில்லையே.

இயேசு யோவானின் கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக, "போய் நீங்கள் பார்ப்பதையும் கேள்விப்பட்டதையும் யோவானுக்கு அறிவியுங்கள். குருடர் பார்வை அடைகிறார்கள், முடவர் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்க்கிறார்கள் மறித்தொரு உயிரோடு எழுந்திருக்கிறார்கள். தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. என்னிமித்தம் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்." சரி, ஏன் இயேசு அவனிடம் வேறுவிதமாக சொல்லவில்லை, "ஆமா, வரப்போகிறவர் நான்தான் என்று சொல்லியிருக்கலாமே? ஏன் இந்த சூழ்நிலை வந்தது? சரி, ஜான், கும்ரானில் எஸ்நீ சமுதாயத்தினரின் சவக்கடல் சுருளில் இதற்கான பதிலை பார்க்க முடியும். சவகடல் சுருளில் அவர்கள் பட்டியல் இடுகிறார்கள், மேசியாவாக இருப்பதற்கான நிபந்தனைகள், இதைதான் இயேசுவும் இந்த இடத்தில் சொல்லியிருக்கிறார். அதாவது அவர்கள், "வானமும் பூமியும் மேசியாவின் சத்தத்திற்கு செவிகொடுக்கும். அவர் நீதிமான்களை நித்திய ராஜ்யத்தின் சிங்காசனத்தில் இருந்து கனப்படுத்துவார், சிறைப்பட்டவர்களை விடுதலை ஆக்குவார், குருடர்களின் கண்களை திறந்திடுவார், தாழ்த்தப்பட்டு இருப்பவர்களை அவர் தூக்கி விடுவார். இதுவரை நடந்திராத காரியங்களை தேவன் தாம் சொன்னபடியே

மகிமையாக நடத்திடுவார். காயப்பட்டவர்களை குனமாக்கிடுவார், மரித்தோரை உயிரோடெழுப்புவார், துயரப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்திடுவார்." இயேசு மேசியா வரும்போது எப்படி நடந்துகொள்வார் என்று யூதர்கள் எதிர்ப்பார்த்து கொண்டிருக்கிறார்கள் என்று யோவான் ஸ்நானகன் கூரியிருந்தாரோ அதையே சொல்லி அனுப்புகிறார். எனவே, யோவான் ஸ்நானகன் சிறையில் இருந்த காரியங்கள், இவை அனைத்தும் யூதர்களுக்கு மேசியாவை பற்றி வாக்குபண்ணின காரியங்களுக்கு பொருந்தும் விதமாக இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்பதற்கு வலுவான ஆதாரங்களாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்**: நேயர்களே, இப்போதுதான் நாம் ஆரம்பித்திருக்கிறோம். இயேசுவின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளை பற்றி பார்த்துகொண்டிருக்கிறோம். முதலாவதாக, நாம சொல்வதுபோல, அவைகளை நம்பமுடியுமா. எப்படி நமக்கு தெரியும்? அதற்கு பிறகு பார்த்தோம், இயேசு தம்மை மேசியா என்று சொன்னது உண்டா? அடுத்த வாரம் இதை தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். இதிலிருந்து சிலவற்றை எடுத்து இயேசு கிறிஸ்து தம்மை தேவனுடைய குமாரன் என்று சொன்னாரா என்று பார்க்கலாம், மனுஷ குமாரன் என்று சொல்லப்படும் இடங்களில் என்ன ஆனது? இதை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன். இது ரொம்ப முக்கியமானது.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.